## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 421/2016 மற்றும் 424/2016** **நாள். 07.09.2023**

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 07ம் நாள் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஆறுமுகம் | சாதி | |
| கிராமம் | காட்டுசித்தாமூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 52 |

**ம..சா.2**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-2ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 2** **ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.9 - 23.04.2016 தேதியிட்ட செஞ்சி அரசு மருத்துவனையில் வழங்கப்பட்ட அசோகன் என்பவரின் பிரேதயபரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல்.
2. ம.த.சா.ஆ.10 - விபத்தில் இறந்துபோன அசோகன் என்பவரின் இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)
3. ம.த.சா.ஆ.11 – விபத்தில் இறந்துபோன அசோகன் என்வரின் வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)
4. ம.த.சா.ஆ..12 - விபத்தில் இறந்துபோன அசோகன் என்பவரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)
5. ம.த.சா.ஆ..13 - மனுதாரர் கோவிந்தசாமி என்பவரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

6.ம.த.சா.ஆ..14 - மனுதாரர் கோவிந்தசாமி என்பவரின் வங்கி கணக்குபுத்தகம் ஜெராக்ஸ் நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது)

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**